Registered as aNewspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (23-12-65) இதழ் 314

விசுவாவசு மார்கழி 8 ஷஃபான்பிறை 29 வியாழக்கிழமை

## சிறு தூரத்துக்குச் செல்ல 'டாக்ஸி' சாரதி மறுத்தாராம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் டாக்ஸி நிலையத்தில் வாடகைக்கு நின்ற டாக்ஸியொன்றில் ஒருவர் சென்று ஆசனத்திலமர்ந்துகொண்டு சுமார் கால் மைல் தூரத்திலுள்ள கல்விக் கந்தோருக்கு டாக்ஸியைச் செலுத்தும்படி கூறியபோது டாக்ஸி சாரதி 'சிறு தூரத்திற்கு டாக்ஸி விடமுடியாது' என்று மறுத்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் யாழ். பொலிஸ் நிலயத்தில் முறைப்பாடுசெய்தார்.

இதைத் தொடர்ந்து டாக்ஸி சாரதிமீது பொலிஸார் வழக்குத் தொடருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள டாக்ஸிகள் சிறு தூரத்திற்குச் செல்வதற்கு சாரதிகள் சம்மதிப்பதில்லை என பொதுமக்கள் பலமுறைகளில் புகார் செய்துள்ளனர்.

வாடகைக்கமர்த்தப்படும் டாக்ஸி மீட்டர்

(6-ம் பக்கம் பார்க்க)

# இடமாற்றத்தை ஒத்திவைக்கவும்

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர் கல்வி மந்திரிக்கு கோரிக்கை

### ஆர்ப்பாட்டம் சட்ட நடவடிக்கைஎடுக்கவும் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

இப்போதைய இடமாற்றம் என்ன அடிப்படையில் செய்யப்பட்டதென்பதை வெளிப்படுத்தும் படியும், அத்திட்டத்தை ஆசிரியர் சங்கங்கள் பரிசீலனை செய்வதற்கு அவகாசம் கொடுப்பதற்கு உத்தேச இடமாற்றத்தை, ஒரு தவணைக்கு ஒத்திவைக்கும்படி, கல்வி மந்திரியையும், கல்வி வித்தியாதிபதியையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம், இடமாற்றக் கடிதங்கள் பெற்ற ஆசிரியர்களின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

வடமாகாண ஆசிரியர்சங்கமும், வட இலங்கை தமிழாசிரியர் சங்கமும் கூட்டாக சேர்ந்து, யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கலை மன்ற மண்டபத்தில் நடத்திய இக் கூட்டத்திற்கு வட இலங்கை தமிழாசிரியர் சங்க தலைவர் பண்டிதர் எஸ். பொன்னுத்துரை தலைமைவகித்தார்.

### ஏன் நியமனம் செய்யவில்லை?

சுமார் 300 ஆசிரியர்கள் சமுகமளித்திருந்த இக் கூட்டத்தில், தலைவர் திரு. பொ பொன்னுத்துரை பேசும் போது கூறியதாவது:

அண்மையில் பத்தாயிரம் சிங்கள மாணவ ஆசிரியர்களும், 475 முஸ்லிம் மாணவ ஆசிரியர்களும் நியமிக்கப்பட்ட போதிலும் ஒரு தமிழ் மாணவ ஆசிரியர்களும் நியமிக்கப்படவில்லை. 800 தமிழ் பட்டதாரிகளும், 100 தராதரம் பெற்ற ஆசிரியர்களும் ஆயிரக்கணக்கான எஸ். எஸ். ஸி. தராதரம் பெற்ற மாணவர்களும் வேலையற்று இருக்கும் போது, இங்குள்ள ஆசிரியர்களை இடமாற்றம் செய்தது நீதியற்றது.

### மேலதிகமாக ஆசிரியர் இல்லை

வடமாகாணத்திலுள்ள மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதாகக்கூறப்படுகிறது. ஆனல் இங்கு 101 ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்குச் சென்றுள்ளனர். 150 மாணவ ஆசிரியர்கள் இருக்கின்றனர்கள். ஆசிரியர் கலாசாலைக்குச் செல்லாவிடில் நான்கு வருடத்தால் இவர்களுக்கு வேலைகிடையாது. பட்டதாரிகள் ஆசிரியர் கலாசாலைக்குச் செல்லவே முடியாது. இவ்வருடம் புதிதாகச் சேரும் மாணவர்களால் சராசரி அதிகரிக்கும். இப் புதிய மாணவர்களுக்கு, ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். ஆதலால் இங்கு ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கிறர்களென்பது தவறனது.

எந்தஅரசாங்க ஊழியர்களுக்கும் நான்கு வருடத்தில் மாற்றம் கிடைக்கும் என்பது தெரியும். ஆனல் ஆசிரியர்களுக்கு மட்டும் அவர்களின் இடமாற்றம் பற்றி தெரிவிக்கப்படாது. மாற்றத் திட்டத்தை வெளியிடும்படி கல்வி மந்திரியைக் கேட்பதற்கு பாராளுமன்ற அங்கத்தவர்கள் தயங்குகிறர்கள் இடமாற்றத்தை நியாயப்படி நடத்துமாறு கூறக்கூட அவர்கள் தயங்குகிறர்கள். ஆதலால் நாங்கள் எங்கள் சங்கத்தையே நம்பியிருக்கவேண்டும்.

### ஆசிரியர் போராட்டம்

திரு. என் சபாரத்தினம் பேசும்போது, ஆசிரியர்களின் போராட்டம், இடமாற்றம் ஒன்றை மட்டுமே கருதி நடத்தாது, சம்பள உயர்வு மற்றும் பிரச்னைகளை கொண்டதாக இருக்கவேண்டுமென்றும், இப்போராட்டத்தில் இடமாற்றக்கடிதம் பெருத ஆசிரியர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும்கூறினர்.

திரு. ஏ. வைத்திலிங்கம் பேசும்போது, இனிமேலும் அரசியல் வாதிகளை நம்பாது, எங்களையே நம்பி, எங்கள் சங்கம் எடுக்கும் நடவடிக்கையின்படி நடக்கவேண்டுமென்றும், ஆசிரியர்கள்மீது கல்வி இலாகாவின் கட்டுப்பாட்டை நீக்கவேண்டும் என்றும் கூறினர்.

மற்றும் பலர் இடமாற்றத்தை எதிர்த்துப் பேசினர்கள். போராட்ட நிதி ஒன்று சேர்க்கப்படவேண்டுமென்றும், சட்டமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

"இப்போதைய இடமாற்றம் ஒரு திட்ட அடிப்படையில் செய்யப்படாததாகையால் நாம் இதனை எதிர்ப்பதோடு இவ்விடமாற்றத்தை தடுக்கும் நோக்கத்தோடு வேண்டிய முயற்சிகளை எடுக்குமாறு எமது சங்கங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்றதீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நீதி பரிபாலனத்தில்

## பார்லிமெண்டின் விசேஷ சட்டம் தலையீடுசெய்வதாகும்

### சதிவழக்குதீர்ப்புபற்றிபிரிவிகவுன்சில் விளக்கம்

கொழும்பு, புதன்

1962-ம் ஆண்டு புரட்சி சதிவழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்ட 11 பேரின் அப்பீல் மனுவை ஏற்று, அவர்களை விடுதலை செய்த காரணத்தை பிரிவி கவுன்ஸில் நீதி பரிபாலனக் கமிட்டி வெளியிட்டிருக்கிறது.

1962-ம் ஆண்டு சதி புரட்சி சம்பந்தமாக இலங்கை பார்லிமெண்ட் இயற்றிய விசேஷ சட்டம் நீதிபரிபாலனத்தில் தலையீடு செய்வதாகும் என கமிட்டி தெரிவித்திருக்கிறது.

இம் மாதம் 2-ம் திகதி, பிரிவிகவுன்சில் மேற்கண்ட 11 பேரும் விடுதலை செய்யப்படவேண்டும் என அது தீர்ப்பளித்தது. தீர்ப்பைத் தொடர்ந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களாயினும், தீர் பின் வாசகம் இப்போதுதான் வெளிவந்திருக்கிறது.

## "இடமாற்றத்தை விரும்பாதவர் இளைப்பாற உரிமை வேண்டும்"

### மந்திரிக்கு ஒரு சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணப், வியழன்

ஜனவரி மாதம் 1-ந் திகதி நடைபெறவிருக்கும் ஆசிரியர் இடமாற்றம் நீதியற்றதாகவும் ஒழுங்கீனமானதாகவும் இருப்பதால் அதனை ரத்து செய்யும்படியும், அல்லது பின்போட்டு திட்டமான ஒழுங்குள்ள இடமாற்றத்தை உருவாக்கும்படியும், அது முடியாவிடில் இடமாற்றத்தை விரும்பாத ஆசிரியர்கள் முழுப் பென்ஷனுடன் இளைப்பாற விரும்பின் அதற்கு இடமளிக்குமாறும் தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் தெரிவித்துள்ளது.

தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கத் தலைவரும், காரியதரிசியும் கூட்டாக கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் இடமாற்றத்தை ரத்துச் செய்வதற்கு தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள் சில வருமாறு:

சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் அரசினர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஒரே சேவை மூப்பு அட்டவணை தயாரித்து வித்தியாசங்களை நீக்காது மாற்றினல் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர் தன்னிடத்தில் கல்வி கற்ற மாணவராகிய ஒரு தலைமையாசியருக்குக் கீழே கடமையாற்ற நேரிடும்.

விவாகமாகாத ஆசிரியைகள் வெளிநாடுகளில் பாதுகாப்பின்றி வாழமுடியாத கஷ்ட நிலை.

வடபகுதியிலேயே ஆங்கில உதவியாசிரியர்கள் (எஸ். எஸ். ஸி.) பற்றாக்குறையாக இருக்கவும் அவர்கள் இங்கிருந்து மாற்றப்பட்டமை.

அரசினர் பாடசாலைகளைச் சுவீகரித்தும் இன்றுவரை நிரந்தர நியமனம் ஆசிரியர்களுக்கு வழங்கவில்லை. அதற்குமுன் மாற்றப்பட்டுள்ளார்கள்.

நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அந்நியமனத்தின் மேல் நான்கு வருட சேவை ஒரு இடத்தில் ஆற்றுமுன் மாற்றியவை.

கல்விச் சேவைக் கொமிஷன் நியமித்து மாற்றத் திட்டத்தைப் பாரபட்சமற்ற முறையில் செய்ய முற்படாமை.

## பரந்தனுக்கு புதிய தபால் நிலையம்

கிளிநொச்சி, புதன்

பரந்தன் தபால் நிலையம் கல்கிசை தபால் நிலையம் போன்று கட்டப்படுமென்றும் தெஹிவளையிலுள்ளது போன்று கட்டஇயலாதென்றும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக தபால் தந்தி அமைச்சின் அதிகாரி அறிவித்துள்ளார்.

மேலும்பரந்தனுக்கும்கிளிநொச்சிக்கும் தானகவே இயங்கும் சுவீச் போட்டை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் கவனிக்கப்பட்டு வருவதாக எம். பி.க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுகதை, கவிதை போட்டி பரிசுகள்

### அரசாங்க அதிபர் வழங்கினர்

யாழ்ப்பாணம், வியா.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி 'ஈழநாடு' நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு நேற்று மாலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா பரிசில்களை வழங்கினர்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் மகாநாட்டறையில் நடைபெற்ற சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்குழுவின் கூட்டத்தில் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு திரு. பெரி. சண்முகநாதனுக்கும், கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ச. வே. பஞ்சாட்சரத்துக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சமூகஏற்றதாழ்வுஒழிப்புக் குழுவினரின் சேவையையும் ஆதரவு கொடுத்த 'ஈழநாடு' பத்திரிகையும், பரிசில்கள் பெற்ற எழுத்தாளர்களின் திறமையும் அரசாங்க அதிபர் பாராட்டிப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உணவில்லாதபோது உணவும், உடையில்லாதபோது உடையும், இல்லிடம் இல்லாதபோது இல்லிடமும் ஏழைகளுக்குக் கொடுப்பதே எனக்குக் கொடுப்பதாகும். —யேசு

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 8 உ (23-12-65)


# அரசியல திட்டத் திருத்தம்

இலங்கை அரசியல் அமைப்புத் திட்டத்தைத் திருத்தி அமைப்பது சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதற்கென பார்லிமெண்டின் இரு சபைகளிலும் உள்ள அங்கத்தவர்களைக் கொண்ட தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவிருக்கிறது. அரசியலமைப்புத் திட்டத்தைத் திருத்துவதற்காக இதற்குமுன் பலதடவைகளில்தெரிவுக் குழு நியமிக்கப்பட்டும் பார்லிமெண்ட் கூட்டத்தொடர்கள் கலைக்கப்பட்டதாலும் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டதாலும் அவை உருப்படியான ஆலோசனைகளைச் செய்து முடிக்க இயலாது போய்விட்டது. முன்னைய அரசாங்கங்களும்இப்போதைய அரசாங்கமும் சிம்மாசனப் பிரசங்கங்களில் இலங்கையைக் குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தவும் செனட்சபை அந்தஸ்து, பொதுச்சேவைக் கமிஷன் அந்தஸ்து பற்றியும் ஆலோசனை செய்து அரசியல் அமைப்புத்திட்டத்தை திருத்துவதற்கு சிபார்சு செய்வதற்காக பார்லிமெண்டின் இரு சபை அங்கத்தவர்களையும் கொண்ட தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்று தெரிவித்துவந்துள்ளன.

இன்று ஆளும்கட்சியின் தீர்மானப்படி அரசியல் அமைப்புத் திட்டத்தைத் திருத்துவதற்கான ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பார்லிமெண்ட் அங்கத்தவர்களைக் கொண்ட தெரிவுக்குழு நியமிக்கப்படவிருக்கிறது. இலங்கையை ஒரு குடியரசு நாடாக்கும் யோசனைக்கு இலங்கை மக்கள் எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அரசியலமைப்புத் திட்டத்தைத் திருத்தும்பொழுது இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென்பதே முக்கிய விஷயம். இன்றுள்ள அரசியலமைப்புத் திட்டத்தில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கும்29வது ஷரத்தின் முதலாம்இரண்டாம் விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் கடந்தசில வருடங்களாக சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் பல பறிக்கப்பட்டுவிட்டன. அரசியல் அமைப்புத் திட்டத்தின் 20வது ஷரத்தின் உப விதிகள் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கவில்லை. இந்தஅரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவரான, காலஞ்சென்ற சேர் ஐவர் ஜென்னிங்ஸ்கூட, இலங்கையில் சிறுபான்மையினர் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கண்டு, அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கியதில் பெருந்தவறு நேர்ந்துவிட்டதாக, உணர்ந்து வருந்தினார்.

முதலில் செய்த தவறு மீண்டும் அரசியல்அமைப்புத்திட்டத்தைத் திருத்தும் பொழுது ஏற்பட்டுவிடக்கூடாது. சென்ற ஒன்பதுவருட காலமாக இந்நாட்டின்சிறுபான்மை இன மக்கள் பெருந்தொல்லைகளுக்குள்ளானார்கள். அவர்களின் உரிமைகள், இந்தக்காலத்தில் தான் சட்டரீதியாகவும் நிர்வாகரீதியாகவும்பறிக்கப்பட்டன இன்னுமிருக்கும் உரிமைகளையும் பறித்துவிட வேண்டுமென்ற கூக்குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் சிறுபான்மை மக்கள் ஓரளவு ஆறுதலடைந்திருப்பினும் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பூரண நிம்மதியைத் தரக்கூடியதாகவில்லை. சிறுபான்மை இனத்தவர்களுக்கு, அவர்களின் உரிமைகள் வழங்கப்படும் என இன்றைய பிரதமரும் வாக்குறுதியளித்துள்ளபோதிலும், எதிர்ப்புக்குரலைக் கண்டு ''பெரும்பான்மைச் சமூகத்துக்குத் துரோகமிழைக்கமாட்டேன்; சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிக்கவோ, அவர்களைக் காட்டிக் கொடுக்கவோ மாட்டேன்'' என்று பதில் குரல் கொடுத்திருக்கிறார் பிரதமர். துரோகம் இழைக்கப்பட்டது சிறுபான்மையினருக்குத்தான். உரிமைகள் பறிக்கப்பட்டதும் சிறுபான்மை இனத்தவரிடமிருந்துதான். இதை வெளிவெளியாகப் பிரதமர் துணிந்து கூறியிருந்தாரானால், சிறுபான்மை இனத்தவர் தமது எதிர்காலத்தையிட்டு ஐயம் கொள்ள இடமிருக்காது. ஜனநாயகம் பெரும்பான்மையினருக்கே சகல உரிமைகளையும் பாதுகாப்பையும் அளித்திருக்கையில் சிறுபான்மையினருக்கு உள்ள உரிமைகளையும் அளிக்கக்கூடாதென இந்நாட்டில் சிலர் கோரிக்கை விடுவதும் போராட்டம் நடத்துவதும் சிறுபான்மையினருக்கு அரசியல் திட்டத்தில் போதிய பாதுகாப்பைப் பெற வேண்டியதை அவசியமாக்கியுள்ளது. வெறும் வாக்குறுதிகளை நம்புவது ஏமாற்றத்தில்தான் முடியும்.

அரசியல் அமைப்புத் திட்டத்தில், • சமீபத்தில் ஒரு வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டபடி, ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தின் அடிப்படையில் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துக்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டியது அவசியம். ஐ. நா. மனிதஉரிமை சாஸனக் குழுவில் இலங்கையும் அங்கம் வகிப்பதால் அதன் அடிப்படையில் அரசியல் திட்டத்தில் திருத்த விதிகளைச் சேர்த்துக் கொள்வது கடினமல்ல. அரசியல் திட்டத்தைத் திருத்தும் யோசனைகளில் இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர் விழிப்புடனிருந்து முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## திருவாதிரை நிர்ணயம்

நிகழும் விசுவாவசு வருஷம் மார்கழி மாதம் 13-ந் திகதி செவ்வாய்க்கிழமை திருவெம்பாவைப் பூசை சதய நக்ஷத்திரத்தில் ஆரம்பமாகி 21-ந் திகதி புதன் கிழமை அபிஷேகமும் உதயத்தில் ஆர்த்திரா தரிசனமும் நடைபெறவேண்டியதே சிவாகம நாற்றுணிபு ஆகும். இரகுநாதையர் பஞ்சாங்கத்திலும அவ்விதமே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்திய தரும ஆதீன வாக்கிய பஞ்சாங்கத்திலும் 13-ந் திகதி செவ்வாய்க் கிழமை சீர்காழி, சிதம்பரம், ஆவுடையார்கோயில் முதலியவற்றில் திருவெம்பாவை உற்சவ ஆரம்பம் எனவும், 21-ந் திகதி புதன் கிழமை சிதம்பரத்தில் பின்னிரவு நடேசர் அபிஷேகம், பகல் திருத்தேர் எனவும், வியாழக்கிழமை சிதம்பரம், கோனேரிராஜபுரம் முதலிய தலங்களில் தரிசன விசேஷம் எனவும் நிர்ணயம் செய்துள்ளார்கள்.

ஆகையால் 13-ந் திகதி ஆரம்பித்து, 22-ந திகதி ஆர்த்திரா தரிசனமுஞ் செய்து இட்டசித்திகளைப் பெறுவார்களாக.

ச. குமாரசுவாமிக்குருக்கள்,
அச்சுவேலி.

## பிரச்னைகள் தீர ஆசிரிய சேவைக் கமிஷன்

ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்னை இப்பொழுது ஆசிரிய சங்கங்களுக்கிடையே பிளவுகளைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது. ஆசிரியர்களின் இடமாற்றம், நியமனம், பதவி உயர்வு போன்ற விஷயங்களை ஆராய்வதற்கு ஆசிரியர்களுக்கோர் தனியான சேவைக் கமிஷன் ஒன்று நிரந்தரமாக நியமிக்கப்படவேண்டும்.

வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ் ஆசிரியர்கள், வடக்கைவிட்டுபோக மாட்டோம் என்று சொல்லவில்லை. ஆனல் இன்னும் அரசினர் சேவையில் சேர்ந்து உறுதியான நியமனம் பெருதவர்களை இடமாற்றம் செய்வது முறையல்ல. அவர்களை வெளியே தள்ளுவது அநீதியாகும். ஆசிரிய சங்கங்கள், போட்டிமனப்பான்மையை ஆசிரியர்கள் மத்தியில்வளர்த்து தொழிற்சங்க உரிமைகளை அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்கின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும்.

அரசினர் நியமனம் பெற்று நான்கு வருடங்களாவது வடக்கில் சேவை செய்தவர்கள் தெற்கே மாற்றப்பட்டு, அங்குள்ள தமிழ் ஆசிரியர் பற்ருக்குறையை நீக்க முன்வர வேண்டும்.

எமது பிரச்னைகள், மாற்றத்துடன் ஓரளவு குறைந்தாலும் ஆசிரிய தொழிற்சங்க ஒற்றுமை என்றும் நிலைபெற்று நாங்களே எமது பிரச்னைகளை தீர்க்க முன்வரவேண்டும்.

எங்களின் சங்கம் நீண்ட காலமாக வாதாடி வருவதுபோல, ஆசிரியர்களின் பிரச்னைகளைக் தீர்க்க ஒரு தனியான சேவைக்கமிஷன் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும்.

வ. கிருஷ்ணபிள்ளை,
தலைவர்,
ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கம்
யாழ். கிளை.

## 'மறையாது நினைவில் நிற்கிறர் நாவலர்'

வவனியா, செவ்.

'உலகில் தோன்றி மறைந்த பெரியார்கள் பலர். ஆனல் அவர்களுள் தோன்றிய நாள் தொடக்கம் தங்கள் நலனைக் கவனியாது உயிர் உடல் முதலியன தொடக்கம் குடும்பச் சொத்து, உரிமை, முதலியன அனைத்தையும் சொந்த நாட்டுக்கென்றே அர்ப்பணித்து வாழ்ந்து வந்த பெரியார் மிகவும் சிலரே. வாழும் போது பேரும் புகழுடன் வாழ்ந்து இறந்த பின் அவரை யார் என்று அறியாமல் மண்ணோடு மண்ணாக ஒன்றி இருப்பவர் அநேகர். ஆனல் வாழும்போது மக்களால் சொற்பம் அறியப்பட்டு இறந்த பின் மறையாது நினைவில் நிற்பவர் நாவலர்.

இவ்வாறு நேற்று பரந்தன் புகையிரத நிலையத்துக் கருகாமையிலுள்ள விநாயகராலய முன்றலில் நடைபெற்ற ஆறுமுக நாவலர் தின விழாவில் பேசிய தென்மராட்சி இசைக் கலைமன்றத் தலைவர் திரு. க. இராமச்சந்திரன் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில்: 'அறியாமையினால் ஆங்கிலேயரிடம் இலங்கை நாட்டு மக்கள் அவதியுற்று சீரும், சிறப்பும் குன்றி தாய் மொழியையும் மதத்தையும் மறந்தபோது நாவலர் நல்வழி காட்டினர்' என்ருர்.

விழாவிற்கு திரு. வி. சுப்பிரமணியம் தலைமைதாங்கினர்.

---

துணுக்காய், புதன்

மாங்குளம் உப தபால் நிலையம் அடுத்த வருடமுற் பகுதியிலிந்து தபால் நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹோசிமின் சொன்னது என்ன?

ரோம், டிச. 22

வியட்னமிலிருந்து உடனடியாக அமெரிக்க துருப்புக்கள் வெளியேருமலேயே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாமென வட வியட்னும் தலைவர் ஹோசிமின் கூறியதை தம் காதில் கேட்டதாக, சென்ற மாதம் ஹானேய்க்கு விஜயம்செய்த இரு இத்தாலியப் பேராசிரியர்களில் ஒருவர் மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கிருர்.

ஐ. நா. பொதுச்சபைத் தலைவரான இத்தாலியைச் சேர்ந்த சிஞ்ஞோர்பன் பாணிக்கும் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்குக்குமிடையே இந்த விஷயம் சென்றவாரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது எனினும் வடவியட்னும் இச் செய்தியை மறுத்துள்ளது.

(பி.டி.ஐ.)

(5-ம் கலத் தொடர்ச்சி)

தமிழர் எங்கு வாழ்ந்தாலும் ஆங்கிலச் சொற்களுக்கு ஒரேமாதிரியான தமிழ்ச் சொற்களை உபயோகிக்கக்கூடிய பணியை இந்த மகாநாடு செய்தால் தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் பயனடையும்.

--- ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

பொன்னன நேரத்தை கட்சி அரசியலில் செலவிடாமல், அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க முன் வர வேண்டும் என்று செனட்சபைத் தலைவர் ஒரு வைபவத்தில் கோரிக்கை விடுத்திருக்கிருர்.

இது பழைய கோரிக்கை தான். யார் கோரிக்கை விடுத்தாலும் அரசியல் தலைவர்கள் தங்கள் கோரிக்கைகளை விடமாட்டார்கள். எந்த உரிமைபறிபோனாலும் அவர்களது உரிமையைப் பறிபோகவிடலாமா?

ஃ ஃ ஃ

அரசியல் தலைவர்களிடம் தான் கட்சி இருக்கிறதென்பதல்ல. ஒவ்வொரு இடத்திலும் இந்த 'கட்சி' இருந்து கொண்டு படுத்துகிறபாடு, அப்பப்பா! வீடுகளில் கூட தாயும் மகனும் ஒரு கட்சி. அப்பாவும் மகளும் மற்ருெரு கட்சி. தொழிலாளர்களுக்குள்ளும் கட்சிதான்! முதலாளிகளுக்கிடையிலும் அது இருக்கிறது.

இந்த ஆசிரியர் இடமாற்றம் ஒரு பிரச்னையாகியிருக்கிறதல்லவா? அதிலும் பல கட்சிகள். சங்கங்கள் ஒன்ருு, இரண்டா?

ஃ ஃ ஃ

உலகத் தமிழாராய்ச்சிக் கழகமும், மலாயாப் பல்கலைக் கழகமும் கூட்டாக அடுத்த ஏப்ரல் திங்களில் கோலாலம்பூரில் நடத்தவிருக்கும் ஏழு நாள் தமிழாராய்ச்சி மாநாட்டினை மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் திறந்து வைப்பார்.

உலகத்தில் பல பாகங்களிலிருந்தும் சுமார் 200 அறிஞர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழிலிலக்கியக் கோட்பாடு, தமிழ்பேசும் சமூகங்களின் சமூக வரலாறு, தென்கிழக்காசியாவில் தமிழ் இலக்கிய பண்பாட்டுச் செல்வாக்கு, அமைப்பு—அடிப்படையான வரலாற்று அடிப்படையான மொழியில், தமிழிலக்கியங்களின் தமிழல்லாத மொழிகளில் உள்ள மொழி பெயர்ப்புகள் ஆகியவற்றில் மகாநாடு முக்கியமாகக் கண்ணோட்டம் செலுத்தும்.

தென்கிழக்காசியாவில் தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புகளை ஆய்வதில் திசை திருப்பும் பணியில் இந்த மகாநாடு ஈடுபடும் என்று உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் இணைச்செயலாளர்களில் ஒருவரான சேவியர் தனிநாயக அடிகள் தெரிவித்திருக்கிருர்.

தாய்லாந்து அரசர்களின் முடிசூட்டு விழாவில் திருப்பாவை, திருவெம்பாவை பாடுதல், தாய்லாந்தில் கம்பராமாயணச் செல்வாக்கு, கம்போடியா, வியட்னும் பல்லவ கலை சிற்பச் செல்வாக்குகள், ஜவா சுமத்திராவில் சைவசித்தாந்த தத்துவங்கள் போன்றவை உதாரணமாக ஆராயப்படுமாம்.

இந்த மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்று நல்ல பயனைத் தரவேண்டுமென்பதே எமது அவா. இதேசமயம் இந்த மகாநாடு மற்ருெரு பணியையும் மேற்கொள்ள வேண்டும். இந்தியா, இலங்கை, மலாயா முதலிய நாடுகளில் பிறமொழிச் சொற்களுக்கு தமிழ்ச்சொல் ஆக்கப்படுகின்றன. ஆங்கிலக் கலைச் சொற்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு முறையில் தமிழாக்கப்படுகின்றன

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடவியட்னுமுக்கு ரஷ்யா ராக்கெட் சப்ளை

## யுத்தத்தைநிறுத்த சதிசெய்வதாய் ரஷ்யாமீது சீன பாய்ச்சல்

மாஸ்கோ, டிச. 22

வடவியட்னுமுக்கு, ரஷ்யா முதல்தடவையாக ராக்கெட்டுகளை வழங்கியிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

புதிய தொழில் நுட்ப பொருளாதார உதவி ஒப்பந்தம் ஒன்றும் இருநாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.

அதேசமயம் ஆளில்லா உளவு விமானம் உட்பட 6 அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாய் ஹானேய் ரேடியோ அறிவித்தது. விமானிகள் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும் அது கூறியது.

வடவியட்னும்மீது குண்டு வீசச்சென்ற அமெரிக்க விமானங்கள், அங்கு மிக் விமானங்கள் தென்பட்டதைக் கண்டன.

தென்வியட்னுமில் வியட்காங் வசமுள்ள விளைச்சல் நிலங்கள் மீது அமெரிக்க விமானங்கள் ரசாயனப் பொருட்களைத் தூவி வருவதாயும். தென்வியட்னுமின் வேண்டுகோள் மீதே இப்படிச் செய்யப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பெப்ரவரி 21ம் திகதி ரஷ்யாவுக்கு விஜயம்செய்து, வியட்னும் போரை முடிவுக்குக் கொண்டுவருமாறு புதிய முயற்சிகளை அங்கு மேற்கொள்வார் என்றும் லண்டனில் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் போர் நிறுத்த நிபந்தனைகளை ரஷ்யா, வடயட்னுமுக்குஅனுப்பியிருப்பதாயும், வியட்னும் மக்களின் யுத்தத்தை நிறுத்தும்படி செய்ய அமெரிக்காவுடன் சேர்ந்து அது சதி செய்துவருவதாயும் சீன குற்றஞ்சாட்டியிருக்கிறது.

---

## ஐ. நா. தீர்மானம்

ஐ. நா., டிச. 22

போர்த்துக்கிய காலனிகளுக்குச் சுதந்திரம் வழங்குவதை வற்புறுத்தும்பொருட்டு அந்த நாட்டுடன் ராஜீய, பொருளாதார உறவுகளை உலக நாடுகள் முறித்துக் கொள்ளவேண்டுமெனப் பொதுச்சபை தீர்மானம் இயற்றியிருக்கின்றது. தீர்மானத்துக்கு ஆதரவாக 66 வாக்குகளும், எதிராக 26 வாக்குகளும் பதிவாயின. 16 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

---

## ஸாம்பியா மீது ரொடீஷிய தாக்குதல்

ஸாலிஸ்பரி, டிச, 22

ரொடீஷியா மீது பிரிட்டன் விதித்துள்ள எண்ணெய்த்தடையை அகற்றுவிடில், அண்டை நாடான ஸாம்பியாவுக்கு முக்கிய எண்ணெய் சப்ளையை தனது நாடு மேற்கொள்ளாது என ரொடீஷியா அறிவித்துள்ளது. (பி. டி. ஸி.)

---

## சீன, பாகிஸதானுக்கு ஆதரவு இல்லை

புதுடில்லி, டிச. 22

வெளிநாடுகளுக்கு சென்ற பாரத நல்லெண்ணத் தூது கோஷ்டிகள் திரும்பியிருக்கின்றன.

மலேஸியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இந்தியாவுக்குப் பூரண ஆதரவிருக்கிறதென்று திரு. டி. பி. கர்மார்கர் தலைமையில் சென்ற தூதுகோஷ்டி தெரிவித்திருக்கிறது.

தாய்லந்து 'ஸீட்டோ' ராணுவக் கூட்டிலுள்ள நாடானாலும் பாகிஸ்தான் மீது குறை தெரிவித்ததாயும், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் காஷ்மீர்விஷயத்தில்இந்தியாவை ஆதரிப்பதாயும் கூறப்பட்டது.

சீன பற்றி எல்லா நாடுகளும் மிகக் கவலைதெரிவித்ததாய் மேலும் கூறப்பட்டது.

பாரத-பாகிஸ்தான் தகராறு அமைதிவழியில் தீர்க்கப்படவேண்டுமென ஈரான் மன்னர் ஷா கூறியதாகத் தூதுகோஷ்டியினர் தெரிவித்தனர்.

கினி, மாலி முதலிய நாடுகளுக்குப் பாகிஸ்தான்மீது பரிவு இல்லையென்றும் நிலச்சுவாந்தார் முறையைக் கொண்ட மதசார்புநாடு என பாகிஸ்தானை அவை கருதுவதாயும், சீனவுக்கு ஆதரவு இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

---

ஏமனில்

## ஒரு மாதத்தில் மீண்டும் போர்

பேரூட், டிச. 22

ஏமனில் 3 ஆண்டு நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் சம்பந்தமான சமாதானப் பேச்சுக்கள் முறிந்துவிட்டதால், மீண்டும் சிவில் யுத்தத்தை இன்னும் ஒருமாதத்தில் துவக்கப்போவதாய் 'ரேயலிஸ்டுகள் தெரிவித்திருக்கிறுர்கள். (பி. டி. ஸி.)

---

## "கல்கி" வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, டிச. 22

ராஜாஜி எழுதிய சில கட்டுரைகளைப் பிரசுரித்ததாகவும், இந்திய பாதுகாப்பு விதியை மீறக்கூடிய வகையில் காட்டூன்களை பிரசுரித்ததாகவும் கல்கி, சுவராஜ்யா பத்திரிகைகள் மீது தொடரப்பட்ட வழக்கை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் வருகிற 30-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## தியேட்டர் இடிந்து மூவர் பலி

கராச்சி, டிச. 22

லாகூரில் சினிமா நடந்து கொண்டிருந்த போது தியேட்டர் இடிந்து விழுந்து 3 பேர் மாண்டனர்.

பல்கனியிலிருந்த 138 பேர் கீழே விழுந்தனர். 22 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

# பர்மிய இந்தியர் பிரச்னை பலனுள்ள முறையில்தீரும்

## காலம்கடந்தாலும் நல்லது என்கிறுர் சாஸ்திரி

ரங்கூன், டிச. 22

இந்தியப் பிரதமர் சாஸ்திரியும், பர்மிய அதிபர் நீவின்னும் நேற்று இரண்டரை மணிநேரம் சர்வதேச பிரச்னைகள் பற்றி விவாதித்தார்கள். அப்போது இருநாட்டு வெளிவிவகார மந்திரிகளும் உடனிருந்தனர்.

பாகிஸ்தான், சீன ஆகியவற்றுடன் இந்தியாவின் தகராறு குறித்து திரு. சாஸ்திரி. பர்மியத் தலைவருக்கு எடுத்துரைத்ததாகக் கூறப்படுகிறது. இந்தியா சமாதானத்தையே விரும்புகிறதென அவர் கூறினுர்.

டாஷ்கண்ட் பேச்சுகள் வெற்றியளிக்க வேண்டுமென இரு தலைவர்களும் விருப்பம் தெரிவித்தனர்.

திரு. சாஸ்திரி நேற்று முன்னுள் பர்மியத் தலைவர் ஆங்ஸானின் கல்லறைக்குச் சென்று மலர்வளையம் சாத்தினுர்.

ஜெனரல் நீவின்னுடன் தமது பேச்சு திருப்திகரமாயிருந்ததாயும் இன்று பேச்சுகள் தொடருமெனறும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

உள்நாட்டில் பல அலுவல்களுக்கு மத்தியில் இந்தியப் பிரதமர் ரங்கூன் வந்திருப்பது இரு நாடுகளின் நட்பை நன்கு பிரதிபலிப்பதாக பர்மிய அரசாங்கப் பத்திரிகையான 'கார்டியன்' கூறியிருக்கிறது.

நேற்று பர்மாவாழ் இந்தியர்கள் மத்தியில் திரு. சாஸ்திரி பேசியபோது பர்மிய இந்தியர் பிரச்னையில் இரு நாடுகளும் தீர்வுகாணமுடியுமென நம்புவதாயும் ஆனுல் தீர்வு ஏற்பட சிறிதுகாலம் செல்லுமென்றும் கூறினுர். இறுதித் தீர்வு பலனுள்ளதாய் இருக்குமென்றும் இந்தியர்கள் தாங்கள் வாழும் நாட்டுக்கு விஸ்வாசமாக இருக்கவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினுர்.

# $1\frac{1}{2}$ கோடி டன் அமெரிக்க உணவு

வாஷிங்டன், டிசம்பர் 22

இந்தியாவுக்கு 1 1/2 கோடி டன் உணவுத் தான்யம் வழங்க அமெரிக்கா முடிவுசெய்திருக்கிறது. இது தற்போதைய மதிப்பீட்டைவிட 50 லட்சம் அதிகமாகும்.

இதற்கிடையில் 4 கோடி 20 லட்சம் டாலர் மதிப்புள்ள கோதுமையை உடனடியாக அனுப்புவதென்றும், அடுத்த செவ்வாய்க்கிழமை இது கப்பலில் ஏற்றப்படும் என்றும் 3 மாதங்களில் கோதுமை அனுப்புதல் பூர்த்தியடையுமென்றும் வாஷிங்டன் விவசாய இலாகா அறிவித்தது.

அமெரிக்க விவசாய மந்திரி திரு. பிரீமன், இந்திய உணவு மந்திரி திரு. சுப்ரமண்யம் ஆகியோர் நேற்று நடத்திய [illegible] [illegible] தொடர்ந்து புதிய முடிவுகள் செய்யப்பட்டன.

# இலங்கை வானொலிமீது, இந்திய படாதிபதிகள் பாணம்

புதுடில்லி, டிச. 22

இலங்கை வானொலியில் பாரத திரைப்படங்களையும், திரைப்பட இசைத்தட்டுக்களையும் ஒலிபரப்ப அனுமதிப்பதில்லை என பாரத திரைப்பட தயாரிப்பாளர்கள் முடிவு செய்திருக்கிறுர்கள். பிப்ரவரி 1-ம் திகதி முதல் இத்தடை அமுலுக்கு வரும்.

விளம்பரச் செலவைச் சிக்கனப் படுத்தி, வெளிசெலாவணியை மிச்சப்படுத்து முகமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

கடந்த 12 ஆண்டுகளாக திரைப்படங்கள், இசைத்தட்டுகள் ஆகியவற்றை இலங்கை வானொலியில் ஒலிபரப்பியதன் மூலம், ஆண்டு ஒன்றுக்கு ஒருகோடி ரூபாய்க்குமேல் அதிகச் செலவு ஏற்பட்டுவருவதாய்க் கூறப்பட்டது.

# "அமெரிக்கா யுத்தத்தில் இறங்க வேண்டும்"

## ஸ்டீவன்ஸனின் வெளிவராத கடிதம்

சிகாகோ, டிச. 22

அட்லாய் ஈ. ஸ்டீவன்சன் தான் இறப்பதற்கு முன் எழுதிய கடிதத்தில் தென் வியட்னுமில் சீன கம்யூனிசம் பரவுவததைத் தடுப்பதற்காக ஐக்கிய அமெரிக்கா யுத்த நடவடிக்கையிலிறங்க வேண்டியது அவசியம் என்றும், இல்லையேல் அது முழு தென்கிழக்காசியாவையே பயமுறுத்துவதாயிருக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

"அங்ஙனம் தடுப்பு நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று யாரும் தர்க்கம் செய்தால், அது நம்மை பின்னுக்கு இழுத்துச் செல்வதாகும். அங்ஙனம் நாம் பின் செல்ல, ஆக்கிரமிப்பு சக்தி முன்னேறி நம்மை மேலும் மேலும் சுவீகரிக்கும். இத்தருணம் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி ஈற்றில் அது மகாயுத்தமாக வெடிக்கும்" என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 14-ம் திகதி லண்டனில் உயிர் நீத்த தூதர், தான் தபாலில் போடாமல் விட்டுச் சென்ற கடிதத்தை அவருடைய மகள் அட்லாய் ஈ. ஸ்டீவன்சன் சிக்காகோவில் பகிரங்கப் படுத்தினுர். வியட்னுமில் அமெரிக்கா அனுஷ்டிக்கும் கொள்கையை எதிர்த்து, திரு. ஸ்டீவன்சனை ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க நிரந்தர பிரதிநிதி பதவியிலிருந்து ராஜினுமாச் செய்யும்படி கோரி, பிரபல எழுத்தாளரும், சமூகச் சீர்திருத்தக்காரருமான, திரு. போல் குட்மன் எழுதிய கடிதத்திற்கு மறுமொழியாகவே இந்தக் கடிதம் எழுதப்பட்டது.

திரு. குட்மனுடைய ஆலோசனையை நிராகரித்த தூதர் ஸ்டீவன்சன், "அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையின் மீது எவ்விதமான கண்டனம் தெரிவித்தாலும், அதன் செயலும், போக்கும் ஸ்திரமானவை" என்று கூறினுர்.

---

## பக்தூனிஸ்தான் பாவே ஆதரவு

புதுடில்லி, டிச. 22

பக்தூனிஸ்தான் கோரிக்கையை தாம் முற்றாக ஆதரிப்பதாக ஆச்சார்யா விேைனு பாபாவே கூறியிருக்கிறுர்.

---

## ரஷ்ய நூல்கள்

மாஸ்கோ, டிச. 22

ரவீந்திரநாத் தாகூரின் மீது ரஷ்ய மக்களுக்குள்ள மதிப்பின் அடையாளமாக அவரது விஸ்வபாரதி பல்கலைக் கழகத்திற்கு ரஷ்ய நூல்கள் அன்பளிப்பு செய்யப்படவிருக்கின்றன.

---

## தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் கோரிக்கை

சுழிபுரம், புதன்

"உபதபால் அதிபர்கள் தற்போதைய சம்பளத்தை 25 வீதம் அதிகரித்தும் நிரந்தர ஊழியர்களாக்கி இளைப்பாறும் சம்பளம் கொடுக்கவேண்டும்" என்னும் தீர்மானம் தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கூட்டத்துக்கு சங்கத் தலைவர் க. கைலாயபிள்ளை தலைமை வகித்தார். பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் செரிவு செய்யப்பட்டன. போஷகர்: க. கைலாயபிள்ளை, தலைவர்: வி. கதிர்காமத்தம்பி, உப தலைவர்கள்: ஏ. வேலுப்பிள்ளை, எஸ். தில்லையம்பலம், எஸ். சேனுதிராசா, செயலாளர்: ஐ. நடராசா, உபசெயலாளர்: க. சிவாஸ்கந்தா. பொருளாளர்: சி. இரத்தினசபாபதி.

---

## ஸாம்பியா

நியூயோர்க், டிச. 22

ரெடீஷியாமீது படை பலத்தையும், கட்டாய தடையையும் உபயோகிக்க வேண்டும் என ஸாம்பியா ஐ. நா. விடம் கோரவிருக்கிறது.

---

## கம்யூனிஸ்ட் மீது குற்றச்சாட்டு

நியூயோர்க், டிச. 22

1964-ம் ஆண்டு ஹார்லீம் கலகத்தில் குழப்பம் செய்து கொள்ளையடித்ததாக வில்லியம் எப்பன் என்ற 33 வது நீக்ரோமீது குற்றஞ்சாட்டியிருக்கிறது. இதற்கான ஆகக்கூடிய தண்டனை 12 ஆண்டு சிறையும் 6000 டாலர் அபராதமும் ஆகும். பி. டி. ஸி

---

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம். வியா.

ஆறுமுகநாவலர் குருபூசை தெல்லிப்பழை பாவலர் ஞானோதய சபையினரால் காசிவிநாயகர் ஆலயமண்டபத்தில் நடைபெற்றது.

பிரமஸ்ரீ எம். சிவகடாட்சக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்குருபூசையின்போது நாவலர் திருஉருவப்படத்துக்கு விசேஷ ஆராதனைகள் வழிபாடுகள் இடம்பெற்றன. மாணவ மாணவிகளின் தேவார உபந்நியாசங்களும் நடைபெற்றன.

இறுதியில் நாவலரின் சீரிய தொண்டுபற்றி தலைவர் எடுத்துக்கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவிலில் பஸ்தரிப்பு நிலையம் அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் உசன், கெற்பலி, விடத்தற்பளை, போக்கட்டி, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய 6 கிராமங்களிலும் 1000 குடும்பங்கள் வரை வசிக்கிறார்கள். இக் குடும்பங்களின் பிரதான மத்திய பிரயாண இடம் மிருசுவில்தான். ஆனால் மிருசுவிலில் பஸ் தங்கும் நிலையம் இல்லாதபடியால் இப் பிரயாணிகள் பிரயாணம் செய்வதில் பெரும் கஷ்டமடையவேண்டியுள்ளதென்றும் விசேஷ பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் கொடிகாமத்தில் அல்லது எழுதுமட்டுவாளில் இறங்கி நடந்து வரவேண்டியுள்ளது. இவ்வித கஷ்டங்களைப் போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேசியமய சேவை மந்திரி, வட-பிரதேச போக்குவரத்துச்சபை அதிகாரி, சாவகச்சேரி எம். பி. ஆகியோரைக் கேட்டுக்கொள்வது எனத் தெரிவிக்கும் தீர்மானம் உசன் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்ளும் பின்வரும் தீர்மானங்களும்நிறைவேற்றப்பட்டன.

வெளியிடங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் நலனை உத்தேசித்தும் உசனில் இருக்கும் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு வரும் வெளியிடத்து மாணவர்களின் நலனை உத்தேசித்தும் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்றுவரும் பாடசாலைச் சேவை பஸ்ஸை தை மாதம் 7ம் திகதியிலிருந்து எழுதுமட்டுவாள் வரை விஸ்தரித்தல்.

கொடிகாமம் மிருசுவில் பஸ் கட்டணத்தை 5 சதமாகக் குறைத்தல்.

உசன் மக்களின் நலன் கருதி கொடிகாமத்திலிருந்து கச்சாய் வழியாக ஓர் பஸ் சேவையை ஆரம்பித்தல்.

மேற்படி கூட்டம் சங்கத் தலைவர் திரு. வி. நடராசா தலைமையில் நடைபெற்றது.


REGAL--JAFFNA
NOW SHOWING

Julie Meredith
Kerwln Mathews
IN
JACK THE GIANT KILLER

நியூ காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப் பின் பாசம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30 6-30, 9-45 சனி-ஞாயிறு 10-30
S பாலச்சந்தர் - விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை


## தாராசிங் பயமுறுத்தல்

அமிர்தசரஸ், டிச.21

பஞ்சாபிசுபா கோரிக்கையை அடைவதற்கான அடுத்த நடவடிக்கையை விரைவிலேயே மாஸ்டர் தாராசிங் அறிவிப்பார்.

## போப்புக்கு ஜோன்ஸன் ஆதரவு

வாஷிங்டன், டிச.22

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்துமாறு போப்பாண்டவர் விடுத்த வேண்டுகோளை ஜனதிபதி ஜோன்ஸன் வரவேற்றிருக்கிறார், போப்பாண்டவர் பெரும் சமாதான் வாதிகளில் ஒருவர் என திரு. ஜோன்ஸன் வருணித்திருக்கிறார்.

(பி.டி.ஸி.)

## அமெரிக்க முயற்சி தோல்வி

கேப்கென்னடி, டிச.22

ஒரேராக்கட்டில் 4 விண்வெளிக் கிரகங்களை அனுப்பும் அமெரிக்க முயற்சி தோல்வியுற்றது. 3 கிரகங்கள் தவறான திசைக்குச் சென்றன என்றும், நான்காவது கிரகம் அனுப்பப்படவில்லையென்றும அறிவிக்கப்பட்டது.

# "இலங்கையின் மதிப்பை உயர்த்திவிட்டார் ஜி. ஜி."

யாழ்ப்பாணம், வியாழன் 'திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உலகநாடுகளின் ஸ்தாபனத்தில் இலங்கையின் மதிப்பை உயர்த்திவிட்டார். அவரது திறமை வாய்ந்த பேச்சு 117 நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது'.

இவ்வாறு தமிழ்காங்கிரஸ் உடுவில கிளையின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தவர் திரு. சி. பி வி. எம். கே. முதலியார், மானிப்பாயில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. ஜி. ஜி. இலங்கை திரும்பும்போது அவருக்கு வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்டக் கூட்டத்திலேயே முதலியார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கே. சோமஸ்கந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், சேர். பொன்னம்பலம் இராமநாதனையும் ஒருபடி மிஞ்சிவிட்டாரென்று கூறக்கூடியதாகவிருக்கிறது. சென்ற அக்டோபர் மாதம் முதல் திகதியன்று திரு. ஜி. ஜி. உலக சமாதானத்துக்கு வழிகோலும் வகையில் ஐ. நா.வில் நிகழ்த்திய உரை எக்காலமும் நிலைத்து நிற்கக்கூடியது.

ஐ. நா.வின் சமாதானத் தூதுகோஷ்டித் தலைவராக திரு. ஜி. ஜி. தெரிவு செய்யப்பட்டது அவர் பிறந்த நாட்டுக்கு மிக்க பெருமையைத் தேடித் தந்துள்ளது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



9-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) விஜயா (அம்பாறை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நமபியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்



அன்பின் இன்பக் கனி






அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும் குழந்தைகள் பெலனான சுக வளர்ச்சி பெறுகிறார்கள்.

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு

173/66

ஒஸ்டர்மில்க் குழந்தைப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள
கீழ்கண்ட விலாசத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும்
பகுதி 25, கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### இறை மதிப்பு வரி அறிவித்தல்

இறை மதிப்புவரி செலுத்தவேண்டியவர்கள் தயவு செய்து பணத்தை 31-12-65க்கு முன்னர் செலுத்தவும். அப்படிச் செலுத்தத் தவறியவர்களின் வீட்டிலோ அல்லது வளவிலோ உள்ள அசைவுள்ள அல்லது அசைவற்ற பொருட்களைக் கைப்பற்றி கிராமசபையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என மிக மன வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு,
கா. க. விசுவலிங்கம்,
தலைவர்,
கிராமசபை,
1514 காரைநகர்.




### கொழும்பு
**வியாழன் 23 - 12 - 65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 திருவெம்பாவை, 7-10 திருப்பாவை, 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

334 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல். 7-00 பேச்சு — 'நவநீதகிருஷ்ண பாரதியார்' — பேசுபவர் ஆர். சுந்தரேச சர்மா, 7-15 தொடர்நாடகம் — 'டாக்டர் ரஞ்சிதம்', 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 கிறிஸ்மஸ் நாடகம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### லாகோஸில் காமன்வெல்த் குழு

லாகோஸ், டிச. 22

அடுத்த மாதம் லாகோஸில் காமன்வெல்த் பிரதமர்கள் கூடி ரொடீஷியா பற்றி விவாதிக்கவேண்டுமென்ற நைஜீரிய யோசனை பற்றி விவாதிக்க காமன்வெல்த் அலுவலக அதிகாரிகள் பலர் இங்கு வந்திருக்கிறார்கள். (பி.டி.ஸி.)

### பாலஸ்தீன அகதிகளுக்கு இலங்கை உதவி

ஐ.நா. டிச.22

சமீப கிழக்கிலுள்ள பாலஸ்தீன அகதிகளுக்கு நிவாரண உதவியாக பணமும், பொருட்களும் வழங்குவதாக இலங்கை உள்ளிட்டு 24 நாடுகள் ஐ.நா. நிவாரண உதவி ஏஜென்ஸுக்கு தெரிவித்திருக்கின்றன.

இது சம்பந்தமான மகாநாட்டுக்கு 123 நாடுகள் அழைக்கப்பட்டிருந்தன. 74 நாடுகள் ஏற்கெனவே உதவியளித்திருக்கின்றன.

இலங்கை 1,000 டாலர்களும். இந்தியா ரூ.10,000ம் நிவாரணமளிக்க ஒப்புக் கொண்டன. (பி.டி.ஐ.)




## உதயதாரகை மன்றத்தினரின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி
### இறுதிப் போட்டியில் மந்திரி சுகததாஸா கலந்துகொள்வார்

குரும்பசிட்டி, புதன்

பலாலி அரசினர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் குரும்பசிட்டி உதயதாரகை மன்ற ஆதரவில் எட்டாவது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தினமும் நடைபெற்று வருகிறது. இச்சுற்றுப்போட்டியில் இந்தத் தடவை முதற்பிரிவில் 10 கோஷ்டிகளும் இரண்டாம பிரிவில் 11 கோஷ்டிகளுமாக மொத்தம் 21 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டுள்ளன. தினசரி இரு கோஷ்டிகளாக இடம்பெறும் இச்சுற்றுப்போட்டியின் சாம்பியன் இறுதிஆட்டம் தைப்பொங்கலன்று நடைபெறும். முதற் பிரிவு சாம்பியனுகத்திகழும்கோஷ்டிக்கு ''சுப்பிரமணியம்'' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும், இரண்டாம்பிரிவில் சாம்பியனுகத் தெரிவு செய்யப்படும் கோஷ்டிக்கு 'குரும்பசிட்டி சலேஞ்' வெற்றிக்கிண்ணமும் பரிசாக வழங்கப்படும். இறுதிப்போட்டி பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக தேசியமயசேவைகள்விளையாட்டுத்துறை மந்திரி திரு. வீ. ஏ. சுகததாஸாவும் கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் திரு. ரீ. நீதிராசாவும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டென் திரு. செனரத், டாக்டர் ஜே. சி. துரைசிங்கம், என். நவரத்தினராசா, எம். ஈ. மகேசன் ஆகியோரைக் கொண்ட அமைப்புக் குழு சுற்றுப்போட்டி சிறப்பாக நடைபெறவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவருகின்றது.

#### பண்டத்தரிப்பு வெற்றி

கடந்த சில தினங்கள் நடைபெற்று முடிந்த உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:—

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கோஷ்டிக்கும் ஈவினை பறக்கும் இளைஞர் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பண்டத்தரிப்புக் குழுவினர் 3—1 கோல்களால் எதிர்க் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். இடைவேளையின் முற்பகுதி ஆட்டம் சோர்வு தட்டிய போதிலும் பிற்பகுதி வெகு விறுவிறுப்பாக அமைந்திருந்தது. வெற்றியீட்டிய குழுவிற்கு பனுட்டி உதை மூலமும் ஒருகோல் கிடைத்தது. திரு. கே. முத்துலிங்கம் இப்போட்டிக்கு நடுவராக கடமையாற்றினுர்.

#### வெற்றி தோல்வி இல்லை

குப்பிளான் விக்னேஸ்வராசனசமூக நிலையமும் ஏழாலை யுனைடெட் கழகமும் கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலாஒவ்வொருகோல்களை அடித்துக்கொண்டதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரு கோஷ்டிகளும் அயற் கிராமங்களைச் சேர்ந்துள்ளதால் போட்டி முடியும்வரை விறுவிறுப்பாகக்காணப்பட்டது.

இடைவேளைக்கு முன்னர் கோல்கள் போடப்பட்டன. ஏழாலைக் கோஷ்டி சார்பில் ஆர் பரராஜசிங்கமும் குப்பிழான் கோஷ்டி தரப்பில் திரிபுரரத்தினமும் கோல்களை அடித்தனர். இவ்வாட்டத்திற்கு திரு. சண்முகராசா மத்தியஸ்தம் வகித்தார்.

#### குப்பிளான் வெற்றி

காங்கேசன்துறை நடேஸ்வரன் மகாஷ்டி குப்பிளான் விக்னேஸ்வராசனசமுக நிலையத்தினருடன் கலந்து கொண்ட போட்டியில் குப்பிளான் கோஷ்டி வெகு சுலபமாக 9—0 கோல்களால் மகத்தான வெற்றியீட்டியது. இடைவேளையின்போது கோல் எண்ணிக்கை 4—0 கோல்களாய் இருந்தது. ஆட்டம் ஆரம்பமுதல்இறுதிவரை குப்பிளான் கோஷ்டி சிறப்பாக விளையாடியது. திரு. கே. கிருஷ்ணராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

#### றேயல் வெற்றி

தெல்லிப்பழை றேயல்கழகமும் ஊரங்குணை விவேகானந்தகழகமும் மோதிக்கொண்ட இரண்டாம்பிரிவு ஆட்டத்தில் றேயல் கழகத்தினர் 4—1 கோல்களால் வெற்றியீட்டினர். ஊரங்குணை வீரர்கள் பல கோல்களை அடிக்க எடுத்த முயற்சிகளை றேயல்கழக பின்னணி வீரர்களின் திறமையால் முறியடிக்கப்பட்டது. போட்டிக்கு திரு. வி. பாலசுப்பிரமணியம் நடுநிலைமை வகித்தார்.

#### கட்டுவன் வெற்றி

கட்டுவன் பாலர் ஞானேதயா குழுவினரும் குப்பிளான் சனசமூக நிலையக்குழுவினரும்பங்குபற்றிய இரண்டாம்பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் கட்டுவன் கோஷ்டி 5 - 1 கோல்களால் எதிர்க் கோஷ்டியினரை வெற்றிபெற்றனர்.

### டைமனுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

கட்டுவன் ஞானேதயா சனசமூகநிலையம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிறுவிளான் ஞானேதயா டைமன்கோஷ்டிக்கும் பண்டத்தரிப்புச் சங்கிலியன் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி ரசிகர்கள் மனம் கவரத்தக்கவிதத்தில் நடைபெற்றது.

இடைவேளைவரைக்கும் எந்தக் கோஷ்டியுமே ஒரு கோலும் போடவில்லை. இடைவேளைக்குப் பின்பு ஒரு புதிய உற்சாகத்துடன் டைமன் கோஷ்டி வீரர்கள் எதிர்கோஷ்டியைச் சுற்றிவளைத்தனர். எனினும்இவர்கள் பல கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது குறிப்பிடத்தக்கதாகும் இடைவேளைக்கு பின் பத்து நிமிடங்களுக்குள் டைமன் கோஷ்டி முன்னணிவீரரான என். இராசரத்தினம் சூட்டோடு சூடாக அடுத்தடுத்து மூன்று கோல்களை உதைத்துத் தள்ளினுர். கடைசி நேரத்தில் இவரது முயற்சி பாராட்டக் கூடியதாகும். இதையடுத்து சங்கிலியன் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் சிறந்த 'பாசிங்' செய்து ஒரு கோல் போட்டனர்.

டைமன் கோஷ்டியில் வி. விக்கிரமசிங்கம், சி. ஜெயபாலன், பி. கே. அலோசியஸ், கோல்காப்பாளர் ஆகியோரின் விளையாட்டுப் பாராட்டத்தக்கது. சங்கிலியன் கோஷ்டியில் எஸ். செல்வநாயகம், பத்மநாதன், கோல்காப்பாளர் ஆகியோர் பாராட்டுக்குரியவர்களாவர் இப்போட்டி முடிவில் சிறுவிளான் ஞானேதயா டைமன் கோஷ்டி, பண்டத்தரிப்பு சங்கிலியன் கோஷ்டியை 3—1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. எஸ். நடராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### டிகால்

பாரிஸ், டிச. 22

அடுத்த 7 ஆண்டுகளுக்கு மீண்டும் ஜனுதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜெனரல் டிகால், நாளை மந்திரி சபையில் தனதுஎதிர்காலத் திட்டங்களை விளக்குவார், ஐரோப்பியவிவகாரமே அவரது முதல்பிரச்னை என்றும், மந்திரி சபையில் மாறுதல் ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## குழப்பத்தில் முடிவடைந்த உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாநகர சபைக் கோஷ்டியும் கல்விப் பகுதியினர் கோஷ்டியும் உக்கிரமாகப் போட்டியிட்டு எவருக்கும் வெற்றி தோல்வியின்றி அண்மையில் முடிவடைந்தது வாசகர்நளுக்கு நினைவிருக்கலாம். இவ்விரு கோஷ்டிகளும் இறுதி முடிவு காண்பதற்காக மீண்டும் நேற்று முன்தினம் போட்டியிட்டு வெற்றி தோல்வியை அடைய முடியாத நிலைமையில் குழப்பத்தில் முடிவடைந்தது.

மிகவும் ரசிப்பாக நடைபெற்ற இப்போட்டி குழப்பத்தில் முடிவடைந்தது, உதைபந்தாட்ட ரசிகர்களுக்கும் பெரும் கசப்பை ஏற்படுத்திவிட்டது. இடைவேளைவரைக்கும் போட்டி அமைதியான முறையில் நடைபெற்றது. இடைவேளையின்போது மாநகர சபைக் கோஷ்டி ஒரு கோலும் போடாதவகையில் கல்விப்பகுதிக் கோஷ்டி ஒரு கோல் போட்டிருந்தது; கல்விப்பகுதியின் முன்னணி வீரரான காப்டன் வி. கணேசலிங்கம் இக்கோலை அடித்திருந்தார்.

இடைவேளைக்குப் பின்னர் இரு கோஷ்டியினரும் பல பல கட்டங்களில் தகாத முறையில் விளையாடத் தொடங்கி ரசிகர்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டனர். இப்படியான ஒரு நெருக்கடியான நேரத்தில் கல்விப்பகுதியின் முன்னணி வீரரான வி. ரி. கணேசலிங்கம் ஒரு கோல் போட்டார். அக்கோலுக்கு முதல் நடைபெற்ற 'தகாத'முறை விளை

(6-ம் பக்கம் பார்க்க)


**நீங்கள் எதிர்பார்த்ததிலும் குறைந்த விலை!**

| | | வ. வி. | வி. வி. |
|---|---|---|---|
| வெள்ளைப் பொப்ளின் | 36'' | 2-90 யார் | 240 யார் |
| வெள்ளை லோங்குளோத் | 42'' | 1-95 '' | 1-60 '' |
| வெள்ளை லோங்குளோத் | 42'' | 2-30 '' | 1-85 '' |
| வெள்ளை கேம்பிறிக் | 42'' | 2-00 '' | 2-40 '' |
| வெள்ளை ஷிடிங் | 54'' | 5-50 '' | 3-90 '' |

ஒருவருக்கு 6 யார் மட்டுமே

**டயறம்ஸ்**

54, பெரிய தெரு, :: :: யாழ்ப்பாணம்.


## வரிவிளம்பரம்

### தேவை

பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனத்திற்கு காசர்ளர், பணவசூலாளர் உடனே தேவை. பிணை 500 ரூபா. எழுத்து மூலம் விண்ணப்பியுங்கள். விளம்பர இல. 1619, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1619

காரைநகர், களபூமி ஐக்கிய பண்டகசாலைக்கு மனேச்சர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 30க்கு மேல். கனிஷ்ட பாடசாலைத் தராதரம், கூட்டுறவுப் பயிற்சி அனுபவம் பெற்றவர்கள் கவனிக்கப்படும். மாதச்சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 100/-. ரொக்கப்பிணை ரூபா 1000/-; ஆதனப் பிணை ரூபா 2000/-. தராதர நற்சாட்சிப் பத்திரங்களுடன் 30-12-65 முன் ஷெ பண்டகசாலைத்தலைவருக்குப் பதிவுத்தபால் மூலம் மனுச்செய்யவும். விண்ணப்பிப்போர் 2-1-66 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். 1617

ரிங்கர் (Tinker) வேலை நன்ருகத் தெரிந்த ஆட்களிடம் இருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. திறமைக்கேற்ற சம்பளமும், உடனடியாக வேலையும் உண்டு. விண்ணப்பங்களை கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும். டிறேட், அன்ட் டிரான்ஸ்போர்ட் கோ. லிமிட்., த. பெ. இல: 41, யாழ்ப்பாணம். (M/s Trade & Transport Co. Ltd. P. o Box 41, Jaffna.) 1621

### முதலீடு

வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் உங்கள் பணத்தை முதலீடுசெய்ய விரும்புகிறீர்களா? அப்படியானல் எம்மிடம் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1627, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1627

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணுனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### உப்பு விளைவிப்பது குறித்துப் பார்வையிட்டனர்

வவனியா, புதன்

மாயாறு, மாத்தறன் ஆகிய இடங்களில் உப்பு விளைவிக்கக்கூடிய சாத்தியக்கூறுபற்றி இரு வெளிநாட்டு நிபுணர்கள் அந்த இடங்களைப் பார்வையிட்டுச் சென்றனர். வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம் இந்த இடங்களில் உப்பு விளைவிப்பதை அபிவிருத்தி செய்வதுபற்றி கண்டறியும் பொருட்டு இந்நிபுணர்களை இங்கு அரசாங்கத்தின் தவியுடன் அழைத்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வந்த

# கியூப கப்பல் அதிகாரிகள் அமெரிக்க தூதரகத்தில் தஞ்சம்

கொழும்பு. செவ்.

கியூபா நாட்டுக்குச் சொந்தான உவேரோ எனும் கப்பல் இலங்கை அரசாங்க வட்டாரத்திலும் துறைமுகப் பகுதியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

11,000 தொன் சீனியை இறக்குமதிசெய்து முடித்த இக்கப்பல் ஆபிரிக்காவுக்கு ஆயுதம் அனுப்புகிறதென்ற காரணத்தால் கம்யூனிஸ ஆட்சியிலிருந்து விடுதலை பெறும்வகையில் இதன் காப்டன் ஒகஸ்ட்டோ மார்க்பெலோ கொன்சலஸ் என்பவரும் பிரதம என்ஜினியர் பிரான்சிஸ்கோ ரொபேட்டா துரோக்கா என்பவரும் கொழும்பில் உள்ள அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் அடைக்கலம்கேட்டு அடைக்கலம்பெற்றுள்ளனர் எனத் தெரியவருகிறது.

துறைமுகத் தகவலின்படி ஏனைய கப்பல் உறுப்பினரிடையேயும் இரு பிரிவு இருப்பதாக அறியப்படுகிறது. இவர்கள் கப்பலை விட்டுத் திடீரெனப் பிறருக்குத் தெரியாது வெளியேறியது பற்றி இன்னும் அதிகாரபூர்வமாக கியூபா அதிகாரிகள் இலங்கைக்கு அறிவிக்கவில்லை. இவ்விருவரும் இல்லாத நிலையில் பிரதானஅதிகாரி ஒருவர் பொறுப்பேற்றுள்ள இக்கப்பல் திட்டமிட்டபடி கொழும்புத் துறைமுகத்தை விட்டுச்சென்றால் அதன் அடுத்த துறைமுகமாக மோறேசியஸ் இருக்கும். வெளியேறிய அதிகாரிகள் பேராதனைப் பல்கலைக்கழக சம்பவம் நடைபெற்ற போது கண்டியில் சுற்றுப்பிரயாணத்தைமேற்கொண்டிருந்தார்களெனத் தெரியவருகிறது. சர்வதேச சட்டப்படி இவர்களின் அடைக்கலம் தவறானதல்லவென்றும் தடைசெய்ய முடியாததொன்று என்றும் இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

# அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்க கமிட்டி

## 15 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர்

வெள்ளவத்தை, புதன்

சுதந்திர இலங்கையைக் குடியரசு நாடாக மாற்றி அமைக்கும்வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி அமைக்க 15 பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட கமிட்டி தெரிவு செய்யப்படவிருக்கிறது.

இக்கமிட்டியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களைக் கொண்ட பிரேரணையை சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா நாளை வியாழக்கிழமை ஜனப்பிரதிநிதிகள் சபை கூடும்போது பிரேரிப்பார்.

அங்கத்தவர்கள் பின்வருமாறு-:

திரு. டட்லி சேனநாயகா திரு. பிலிப் குணவர்த்தன, திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, திரு. சி. பி. டி' சில்வா, திரு. எம். டி. பண்டா, ஜனாப் நயினா மரிக்கார், திரு. பீட்டர் கெனமன், திரு. லெஸ்லி குணவர்த்தன, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. மைதிரிபால சேனநாயகா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர். என். எம். பெரேரா டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா.

செனட்சபை, பாராளுமன்ற நியமன அங்கத்தவர் பொதுச்சேவைகமிஷன் நீதிபரிபாலனசேவைக் கமிஷன் ஆகியவற்றின் அடிப்படை உரிமைகளை மாற்றுதவகையில் குடியரசு நாடாக்குவது பற்றி இக்கமிட்டி ஆராயும்.

# தென்னைமரம் விழுந்து இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

மண்ணைப் பெயர்த்துக் கொண்டு, வேரோடு சரிந்து விழுந்த தென்னைமரமொன்றுக்கு 18 வயதான இளைஞனை பரமானந்தம் வாலை ஆனந்தம் என்பவர் பலியான சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கில்னர்கல்லூரிக்கு முன்பாகவுள்ள ஒரு வீட்டு வளவில் நிகழ்ந்தது.

தனது வீட்டுக்கு பின்புறமாக நின்றுகொண்டிருந்த போதே தென்னை மரம் அவர் மீது விழுந்ததென்றும் அவருடைய கால் தென்னை மரத்துக்குள் சேற்றுக்குள் அகப்பட்டு அவஸ்தைக்குள்ளாகி ஸ்தலத்திலேயே மரணத்திற்குள்ளானாரென்றும் கூறப்படுகிறது. மரணத்திற்குள்ளான இவர் இம்முறை ஜி. சி. ஈ. பரீட்சையை எடுத்து முடித்திருந்தார். இவர் வண்ணை. வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவராவர்.

யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு காலஞ்சென்றவர் வீட்டின் பின்புறத்திற்கு சென்றபொழுது தென்னை மரம் விழுந்து, கால்எலும்பு முறிந்து, மரத்தின் கீழ் சிக்கினாரென்றும், சத்தம் கேட்டு கந்தசாமி கணபதிப்பிள்ளை என்பவர் காப்பாற்றசென்றசமயம், அவர் மரணமானார் என்றும் கூறப்பட்டது.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

கூழாவடி கொலைவழக்கு

## சுப்ரீம்கோர்ட்டிற்கு தாக்கல்

யாழ்ப்பாணம், புதன்

கூழாவடி கொலைவழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம்மாஜிஸ்திரேட் கோர்ட்டில், நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபின், நீதிபதி வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு தாக்கல் செய்தார்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந் திகதி கதிரவேலு காளிமுத்து என்பவர் திருமதி ராஜமார்த்தாண்டனைக் கொலை செய்ததாகவும், தி[illegible] கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# சாந்தாராம் மீதான வழக்கு வாபஸ்

பம்பாய், டிச. 22

படத் தயாரிப்பாளரும், டைரக்டருமான சாந்தாராமின் மீது இமாசல் பிரதேசத்தைச் சேர்ந்த கிரிஷண் குமார்நூடான் என்ற ஹிந்தி எழுத்தாளர் தொடர்ந்திருந்த வழக்கை அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

தாம் 1960-ம் ஆண்டு எழுதிய "யட்கார்" என்ற தமது கதையிலிருந்து சாந்தாராமின் "கீத்கயா பதரன் நீ" என்ற படக்கதை திருடப்பட்டது என இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட கட்சிகளிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டதால் வழக்கு வாபஸ்பெறப்பட்டது. (பி. டி. ஐ.)

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம் . வியா.

யாழ்ப்பாணம் முதலாம் கறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. அ. மகேஸ்வரன் என்பவர் முதலாம் குறுக்குத் தெருவில் ஒரு பங்கீட்டரிசிப் புத்தக அடிக்கட்டையை (பி. துண்டு) கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் காரியாலயத்தில் நேரில் வந்துபெற்றுக்கொள்ளலாம்.

## குழப்பத்தில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டுக்கு மத்தியஸ்தர் எதிர்ப்புக் காட்டவில்லை என்று ஆட்சேபித்து மாநகரசபைக்கோஷ்டி ஆதரவாளர்கள் பலமுறை படையெடுத்து கடைசியில் போட்டி நடைபெறாதமுறையில் மைதானத்தில் கூடிவிட்டனர். கல்விப்பகுதிக்கோஷ்டிக்கும் மாநகரசபைக் கோஷ்டியின் ஆதரவாளருக்குமிடையே கைகலப்பு ஏற்படுவதற்கு முன் சில பிரமுகர்கள் தலையிட்டு அதை நடைபெறாமல் செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இடைவேளைக்கு முன் நடந்த விளையாட்டில் மாநகரசபைக் கோஷ்டியின் இடது முன்னணி வீரரான சு. முத்துராசாவின் விளையாட்டு அபாரமாகக் காணப்பட்டது கல்விப்பகுதியைச் சேர்ந்த ரனிஸ்லோ, வி. ரி. கணேசலிங்கம் ஆகியோரின் விளையாட்டு கவர்ச்சியாகக் காணப்பட்டது. யாழ். மத்திய கல்லூரியில் மைதானத்தில் நடைபெற்ற குழப்பத்தில் முடிந்த இப்போட்டிக்கு திரு. டபிள்யு. எவ். ஆர். கனகசபை மத்தியஸ்தராகக் கடயையாற்றினார்.

## மட்டக்களப்பில் கடும் மழை

### மன்னம்பிட்டி ரயில் சேவை பாதிப்பு

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்பிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் பலத்த மழை பெய்வதால் போக்குவரத்துக்கள் பல இடங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மன்னம்பிட்டியா—வெலிகந்தை ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும் கடுமையான மழை தொடர்ந்து பெய்யுமானால் ரயில் சேவைகள் சீர்குலையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'சந்திரமண்டலம் செல்லும் மற்றோர் படி ஏறிவிட்டோம்'

— ஜோன்ஸன்

ஹவுஸ்டன், டிச. 22

இரு அமெரிக்க 'ஜெமினி' விண்வெளிக் கப்பல்களும் விண்வெளியில் சந்தித்ததன் மூலம், சந்திரமண்டலத்துக்குச் செல்வதற்கான படிக்கட்டுகளில் மனிதன் மற்றொரு படி ஏறிவிட்டான் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் தலைவரான திரு. ஜேம்ஸ் வெப் என்பவருக்குஅனுப்பியுள்ள செய்தியில் ஜனாதிபதி ஜோன்ஸன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"விண்வெளியில் ஏற்பட்டுள்ள வெற்றி அமெரிக்காவுக்கு மட்டுமல்ல உலகம் முழுவதற்குமே சொந்தம்" என்று ஜோன்ஸன் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## குற்றச்சாட்டுபற்றி விசாரணை

திருகோணமலை, புதன்

திருகோணமலை நகராண்மைக் கழக உறுப்பினர்கள் திரு. பா. நேமிநாதன், திரு. எஸ். நடராசா, திரு. செ. கே. சோமபாலா ஆகியவர்கள், தலைவர் டாக்டர் சி. சிவானந்தன்மேல் சுமத்திய சில குற்றச்சாட்டுகள்பற்றி உட்ளூராட்சி ஆணையாளர் விடுத்த உத்தரவிற்கிணங்க நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு உதவிஉள்ளூராட்சி ஆணையாளர் திரு. ந. சிவராசா தனது அலுவலகத்தில் விசாரணையொன்றை நடத்தினார்.

விசாரணைக்கு தலைவர் திரு. சிவானந்தத்துடன் மற்றைய மூன்று உறுப்பினர்களும் சமூகளித்திருந்தனர்.

ஆடிட் விசாரணையில் வெளியான மூன்றரை லட்சம் ரூபா துண்டுவிழும் தொகைபற்றியோ, இலங்கை வங்கியிலிருந்து வெளியான இரண்டு லட்சம்ரூபா பற்றியோ அண்மையில் நிறைவேற்றப்பட்ட 1966-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெற்ற செலவினங்களில் காட்டப்படவில்லையென்றும் முதலில் மதிப்பீடுகள் தயாரித்து கேள்விப்பத்திரங்கள் கோராது 8-ம், 9-ம்வட்டாரங்களுக்கு தண்ணீர்க் குழாய்கள் நிறுவ தனிப்பட்ட ஒருவருக்குக் கொந்தராத்து கொடுத்தது பற்றியும் இம்மூன்று உறுப்பினர்கள் தலைவர்மேல்தெரிவித்த குற்றச்சாட்டுக்களைப் பற்றி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் விசாரணை நடத்தினர். நேற்று மாலை 6 மணிவரை நடைபெற்ற இவ்விசாரணை அடுத்த வாரம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 52-வது ஜெயந்தி

கண்டி, புதன்

கண்டி திவ்விய ஜீவன சங்கத்தினர் அதன் தலைவர் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜியின் 52-வது ஜெயந்தியை இம்மாதம் 26-ம் திகதி பூசை அறிவுரைகள் பஜனை முதலியன நடாத்தி கொண்டாடவிருக்கின்றனர்.

காலை நிகழ்ச்சிகள் திரு. எஸ் எம். பி. ஆர். நடராஜ பிள்ளையின் தலைமையில் நடைபெறும். மாலை நிகழ்ச்சிகளுக்கு அதி. வண. சுவாமி சி. ஏ. ஜோகிம் தலைமை தாங்குவார்.

## சிறு தூரத்துக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி மோட்டார்போக்குவரத்து 1951-ம் ஆண்டு 18 இலக்க விதி பின்வருமாறு கூறுகின்றது: வாடகைக்குவிடப்படும்டாக்ஸி மீட்டர் நேராக நிறுத்தப்பட்டிருக்கும்பொழுது எந்த டாக்ஸி சாரதியும் சரியான காரணமின்றி டாக்ஸியை எவருக்கும் வாடகைக்குவிட மறுக்க முடியாது.

## பெருமழையால் மக்கள் கஷ்டம்

வவனியா, புதன்

சமீபத்தில் பெய்த கடும் மழையின் காரணமாக நாய் ஆற்றுப் பாதை தண்ணீருள் தாண்டுவிட்டது. இதனால் மேல் பகுதியில் உள்ள மக்கள் முல்லைத்தீவுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் போக்குவரத்து செய்ய முடியாதிருக்கிறது.

தற்காலிகமாக வத்தை மூலம் பிரயாண வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பாதை தாண்டதால் மூன்று கிராமங்களிலுள்ள சுமார் 5200 மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

வழமையில் திங்கட்கிழமையில் இவர்களுக்கு கிடைக்கும் கூப்பன் அரிசி தற்பொழுது புதன், வியாழக்கிழமைகளில் தான் கிடைக்கின்றதாம். இப்பகுதியில் வாழும் பெண்களும், குழந்தைகளும் நோயுற்றால் உடன் சிகிச்சை பெற முடியாது அவதிக்குள்ளாவதாகவும் தெரிகிறது. போகுவரத்துக் கஷ்டமே இதற்கு காரணம்.

இவர்களது கஷ்டங்களை வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். கூடுதலான வள்ளங்களைச் சேவைல் அமர்த்தஅவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

## புதிய வைத்தியசாலை

துணுக்காய், புதன்

அக்கராயனிலுள்ளஸ்கந்தபுரம் குடியேற்றத்திட்டத்தில் ஐந்தரை லட்சம் ரூபா செலவில் புதிய வைத்தியசாலையொன்று காணி அபிவிருத்திப் பகுதியினரால் கட்டப்பட்டு வருகிறது. இவ் வைத்தியசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியாகியவுடன் விரைவில் வைத்தியசாலை இயங்க ஆரம்பிக்குமென்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மான்யக் கமிஷன் நிறுவக் கோருவர்

பம்பலப்பிட்டி. புதன்

அரசாங்க பாராளுமன்றக் குழு இன்று கூடும்பொழுது அரசாங்க பாராளுமன்ற அங்கத்தவர்கள் சர்வகலாசாலைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மான்யக் கமிஷன் ஒன்றை நிறுவும்படி கல்விமந்திரியிடம் கோருவார்கள் எனத் தெயவருகிறது.


### காணவில்லை

M 785878, M 785879 இலக்கமுடைய கூப்பன்கள் யாழ்ப்பாணம் கூ. மொ. வி. ஸ்தாபனத்தில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் ஈழநாடு ஸ்தாபனத்தில் சேர்ப்பிக்கவும். 1622

### தேவை

(றெமிங்ரன்) தமிழ் தட்டச்சுக்கள் உடன் தேவை. அறிவிக்கவும்:- கணிதக் கல்லூரி, நம். 2 வைரவ கோவிலடி, வெள்ளாந் தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1623


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org